# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2025

## பேச்சு 2012 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

## இணையமும் தமிழும்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்“ என்றார் பாரதியார்.

உலகில் பேசப்படும் முதற் பத்து மொழிகளில் மூத்தமொழி எனப் போற்றப்படும் செம்மொழியாம் தமிழ்மொழி இன்று இணையத்தையும் வியாபித்துள்ளது. இணையத்தின் வரவிற்குப் பின்புதான், தமிழ்மொழியில் உடனுக்குடன் தகவல்களையும் செய்திகளையும் காணொளிகளையும் நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இணையத்தின் வரவால் தமிழும் தமிழ் இலக்கியங்களும் அழியாத வரம் பெற்றுவிட்டன. இணையத்தின் வரவுக்கு முன்பு இலக்கியங்களைப் பாதுகாப்பதில் சிக்கல்கள் காணப்பட்டன. பல இலக்கியங்கள் இயற்கை அழிவுகளின் போது, அழிந்தும் சிதைந்தும் போயின. ஆனால், இன்று இணையத்தின் வாயிலாகத் தமிழ் பாதுகாக்கப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

தமிழ்ச் சொற்களை அகரவரிசையில் தரும் மென்பொருள்கள், எழுத்துருக்கள், எழுத்துமாற்றிகள், தட்டச்சிட்டால் ஒலித்துக் காட்டும் மென்பொருள்கள் எனப் பல புதிய அறிவியற் படைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் நூல்களை மின் நூல்களாக மாற்றி, அவற்றை வாசிக்கவும், தேவையானபோது பெறவும் முடியும்.

வாழ்விடத்துப் பாடசாலையில் கற்கும் கல்விமுறைக்கு நிகராக, புதிய உத்திகளை இணைத்து, இணையத்தில் எமது கலைக்கூடம் இணைந்து பயணிப்பது மெய்சிலிர்க்க வைக்கின்றது. அத்தோடு, எமக்காக தட்டச்சு வகுப்புகளும் இங்கு நடைபெறுகிறதல்லவா?

இவ்வாறு, இன்றைய அனைத்து அதிர்வுகளையும் உலக அளவில் உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளும் இணையத்திற்கு ஈடுகொடுத்துள்ள தமிழ்மொழியின் வளர்ச்சி, வருங்காலத்தில் இன்னும் விரைவாக வளரும் என்பது திண்ணம். மொத்தத்தில், உலக அளவில் தமிழின் தரத்தை உயர்த்த இணையத்தளம் உதவி வருகின்றது. கணணியில் ஆங்கிலம் வகித்த இடத்தை தமிழும் வகிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த வாய்ப்பை இளையவர்களாகிய நாமும் நல்ல முறையில் பயன்படுத்தி, தமிழ்மொழியின் தனித்துவத்தைப் பாதுகாப்பது, எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

நன்றி - வணக்கம்

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.

அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.

மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.